







கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை, சென்னை – அண்ணா அறிவாலயம் கழக அலுவலகத்தில் கழகக் கொள்கைப் பரப்புத் துணைச் செயலாளர் பொன்னேரி வழக்கறிஞர் வெ.அன்புவாணன் சந்தித்து, முரசொலியில், தாம் 100 கட்டுரைகள் எழுதியதைத் தொடர்ந்து வாழ்த்துக்கள் பெற்றார்.

### அரசு கல்லூரிக் கல்வி – தொழில் நுட்பக் கல்வி

# ஆசிரியர்களுக்கு இடமாறுதலுக்கான கலந்தாய்வு!

## உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் அறிவிப்பு!

சென்னை, நவ.10-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுடைய அறிவுரையின்படி தமிழ்நாடு அரசின் கல்லூரிக் கல்வி, தொழில் நுட்பக் கல்வி ஆசிரியர்களுக்கு பணி இட மாறுதலுக்கான பொது கலந்தாய்வு நடைபெறும் என உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் அறிவித்துள்ளார்.

தமிழ்நாடு அரசு கல்லூரிக் கல்வித் துறையின்கீழ் இயங்கும் அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் தொழில்நுட்பக் கல்வித் துறையின்கீழ் இயங்கி வரும் அரசு பொறியியற் கல்லூரிகள், அரசினர் பாலிடெக்னிக் கல்லூரிகள், அரசினர் சிறப்புப் பயிலகங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் ஆசிரியர்களிடமிருந்து பணியிட மாறுதலுக்கான பொதுகலந்தாய்வு நடைபெற வேண்டுமென அரசுக்குக் கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன.

ஆசிரியர்களின் இந்தக் கோரிக்கைகளைப் பரிவுடன் ஏற்று, நடப்பு ஆண்டில் மேற்கண்ட துறைகளின்கீழ் பணிபுரியும் ஆசிரியர்களுக்குப் பணியிட மாறுதலுக்கான பொதுகலந்தாய்வினை வெளிப்படைத் தன்மையுடன் இணைய வழியின் வாயிலாக மேற்கொள்ளலாம் என அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி, கல்லூரிக் கல்வித் துறையின்கீழ் இயங்கும் அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் மற்றும் தொழில்நுட்பக் கல்வித் துறையின்கீழ் இயங்கும் அரசினர் பொறியியற் கல்லூரிகள், அரசினர் பாலிடெக்னிக் கல்லூரிகள், அரசினர் சிறப்புப் பயிலகங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் 2024-25-ஆம் கல்வி ஆண்டிற்கான பணியிட மாறுதலுக்கான பொது கலந்தாய்வினை (counseling) உரிய நெறிமுறைகளைப் பின்பற்றி 25.11.2024-க்குள்ளாக வெளிப்படைத் தன்மையுடன் இணையவழியின் வாயிலாக மேற்கொள்ளுமாறு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுரையின்படி உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க இணையவழியாகப் பெறப்படுகின்ற ஆசிரியர்களின் மாறுதல் விண்ணப்பங்கள் உரிய விதிகளின்படி பரிசீலனை செய்யப்பட்டு ஆணைகள் வழங்கப்படும் என தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.




### ஊரகப் பகுதி அனைத்து மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு

# திட்டச் செயலாக்கம் குறித்த - ஒரு நாள் புத்தாக்கப் பயிற்சி!

## தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் நடத்துகிறது!

சென்னை, நவ.10-

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 27.06.2024 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் “ஊரகப் பகுதிகளில் உள்ள அனைத்து சுய உதவிக் குழுக்களுக்கும் திட்ட செயலாக்கம் குறித்து ஒருநாள் புத்தாக்கப் பயிற்சி வழங்கப்படும்” என்று அறிவித்திருந்தார்.

அதன்படி, ஊரகப் பகுதிகளில் உள்ள 3,29,039 மகளிர் சுய உதவிக் குழுக்களில் உள்ள 39,48,468 உறுப்பினர்களுக்கு ரூ. 30 கோடி மதிப்பீட்டில், நிர்வாகம், நிதி மேலாண்மை மற்றும் தலைமைத்துவம் குறித்து ஒரு நாள் புத்தாக்கப் பயிற்சி தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் அனைத்து மாவட்டங்களிலும் நடத்த முடிவு செய்து, தேவையான நிதியும் விடுவிக்கப்பட்டுள்ளது.

இப்புத்தாக்கப் பயிற்சியில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுநிறுவனத்தின் வழிகாட்டுதலில் ஊரகப் பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வரும், வாழ்வாதார மேம்பாடு, பண்ணை மற்றும் பண்ணை சாரா செயல்பாடுகள், சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களுக்கான சந்தை வாய்ப்புகள், திறன் பயிற்சிகள், வங்கிக் கடன் இணைப்புகள், பாலின விழிப்புணர்வு, சுய தொழில் மேம்பாடு, பிற துறைகளுடன் ஒருங்கிணைப்பு உள்ளிட்ட பல்வேறு செயல்பாடுகள் குறித்தும், தமிழ்நாடு அரசு செயல்படுத்தும் திட்டங்களான மக்களைத் தேடி மருத்துவம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் போன்றவற்றில் சுய உதவிக் குழுக்களின் பங்களிப்பு குறித்தும் பயிற்சிகள் வழங்கப்படுகிறது.

மேலும், அரசின் நலத்திட்டங்கள் குறித்த விபரங்களை கிராமப்புறங்களில் வசிக்கும் மக்களிடையே கொண்டு சேர்ப்பது குறித்தும் இப்பயிற்சியில் உரிய வழிமுறைகள் பயிற்றுவிக்கப்படுகின்றன.

இந்த புத்தாக்கப் பயிற்சியில் பங்கெடுப்பதின் வாயிலாக மகளிர் சுய உதவிக் குழுக்களின் தரமும், செயல்பாடும் மேம்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த சிறப்புகள் நிறைந்த புத்தாக்கப் பயிற்சியானது, மூன்று குழுக்களுக்கு ஒரு அணி என்ற வகையில் (36 நபர்கள்) 1,09,678 அணிகளைச் (Batches) சார்ந்த 39,48,468 சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு, அந்தந்த ஊராட்சிகளில் உள்ள சுய உதவிக் குழு மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு கட்டிடங்களில் நடைபெற்று வருகிறது.

துணை முதலமைச்சர் அவர்கள், சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்டு வரும் புத்தாக்கப் பயிற்சியினை 2025ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்குள் நிறைவு செய்திட அறிவுறுத்தியுள்ளார்.

இவ்வாறு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் தெரிவித்துள்ளது.